# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-கடலூர் மாவட்டம்

(20.02.2016 முதல் 24.02.2016 வரை)

**கடந்த மூன்று நாட்களில் நிலவிய வானிலை (16.02.2016 முதல் 18.02.2016)**

கடலூர் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 32.0°C மற்றும் 23.0-24.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 68 முதல் 87 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 4-6 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 20.02.2016 | 21.02.2016 | 22.02.2016 | 23.02.2016 | 24.02.2016 |
|---|---|---|---|---|---|
| **மேகமூட்டம்** | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| **மழை பொழிவு (மி.மீ)** | 0 | 0 | 0 | 0 | 0 |
| **காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு** | 5 | 5 | 5 | 5 | 5 |
| **காற்று வரும் திசை** | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |
| **வெப்பநிலை°C** | | | | | |
| **அதிகபட்ச வெப்பநிலை°C** | 33 | 33 | 33 | 33 | 33 |
| **குறைந்த பட்ச வெப்பநிலை°C** | 23 | 23 | 23 | 23 | 23 |
| **ஈரப்பதம்** | 68-84 | 68-84 | 68-84 | 68-84 | 68-84 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. கோமாரி நோய்க்கான தடுப்பூசி கால்நடை பராமரிப்பு துறை மருத்துவர்களால் வரும் மார்ச் 1-ம் தேதி முதல் 21 மார்ச் 2016 வரை போடப்படுகிறது. எனவே, கால்நடை பண்ணையாளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் ஆடு மற்றும் மாடுகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
2. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு துசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
3. காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
4. கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதான் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
5. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
6. வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள கால்நடைகள் குளம்பு அழுகல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, உழவர்கள் 40 கிராம் மயில் துத்த பவுடரை (4 சதவிதம்) ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து குளம்பின் மீது தடவுமாறும் அல்லது குளம்பினை நனைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம் அல்லது சிங்க் ஆக்ஸை களிம்பு மற்றும் வேப்பெண்ணை கலந்து தடவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. காய்கறி பயிர்களின் உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவித அளவு வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. நெற் பயிரில் புகையானைக் கட்டுப்படுத்த வேப்பெண்ணை 3 சதவிதம் அல்லது ஹெக்டேருக்கு மீத்தைல்டேம்மட்டான் 25 EC 150 மிலி அல்லது அசிபேட் 75% SP 600-1000 கி அல்லது அசாா்டியாக்டின் 0.03% 1000 மி.லி அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 SL 100-125 மிலி தெளித்துக் கட்டுப்படுத்தவும்.
3. இலை கருவல் நோயைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு காப்பர் ஹைட் ராக்ஸ்சைடு 1250 கி என்ற மருந்தினை நட்ட 30 மற்றும் 45 வது நாள் தெளிக்கவும் அல்லது 20% பசுஞ்சாணம் அல்லது 5% வேப்பங்கொட்டை கரைசல் இரண்டு முறை தெளிப்பதன் மூலம் இலை கருகல் நோயின் தாக்குதலைக் குறைக்கலாம்.